[1982 மார்ச் 23

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்களைச் சேகரித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் வருகிறபோது தருகிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இப்படிப்பட்ட மின் பற்றாக் குறை இருக்கும்போது, சமயநல்லூர் தெர்மல் பிராஜக்ட்டை முன்பெலாம் உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று நினைக்கி றேன். தற்போது இவ்வளவு கடுமையான தட்டுப்பாடு, அந்த சமயநல்லூர் மின் நிலையத்தை விற்றதினால் தான் ஏற்பட்டிருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சமயநல்லூர் நிலையம் இருந்தாலும் யானைப்பசிக்கு சோளப் பொறிபோலதான். ஆகவே, அதையெல்லாம் வைத்து இதோடு பேசுவது சரியல்ல. தலைவர் அவர்களே. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், ஒரு விஷயம் சொல்கிறார்—அவர் பெங்களூரில் தங்கியிருந்தார் என்றும், அங்கே லைட்டுகளே எரியவில்லை என்றும் சொல்கிறார்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 607, 608 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

காடுகளில் மரம் வெட்ட ஏலம் விடுவதில் பின்பற்றப்பெறும் நடைமுறைகள்

*வினா எண். 609—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா.—

(அ) காடுகளில் மரம் வெட்டுவதற்காக ஏலமிடுவதில் பின் பற்றப்பெறும் நடைமுறைகள் யாவை ?

(ஆ) எந்த வகையான மரங்களை வெட்ட அரசு அனுமதிக் கிறது ?

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) வினாக்களுக்கு அவை முன்பு ஓர் விவர *அறிக்கை வைக்கப் பட்டுள்ளது.

---

* 565 முதல் 567 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

1982 மார்ச் 23]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு பேரவையின் சபாநாயகர் அவர்களே, இந்த மரம் வெட்டுவது சம்பந்தமாக விவரங்களிலே ரொடேஷன் கிராப் எனப்படும் வகையில் மரங்களை குறிப்பிட்ட வருடங்களுக்கு பின் வெட்டுவதற்கு அரசு முன்பு அனுமதியளித்து வந்தது. அதிலே நீர் பிடிப்பு இருக்கும் இடங்களிலும், உயர் மலைப் பாங்கான பகுதிகளிலும் உள்ள மரங்களை வெட்டக் கூடாது என்று சொல்வது நியாயம். அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் கீழான தரைப் பகுதிகளில் வளர்க்கப்பட்டு விறகுக்காகவே வெட்டப்படும் இந்த ரொடேஷன் கிராப் மரங்கள் இருந்த இடங்கள் தற்போது காலியாக வெறும் பொட்டல் வெளியாக நிற்கின்றன. ஆகவே, அந்த இடங்களில் மீண்டும் மரங்களை வளர்த்து, 10 வருடங்களுக்குப் பிறகு, அவைகளை வெட்டி விறகுக்காக பயன்படுத்தும் முறையை மறுபடியும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான பதிலைத்தான் இந்த அறிக்கையிலே விவரமாக தந்திருக்கிறோம். இயற்கையான காடுகளில் மரங்களை வெட்டுவதிலே தான் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல ரொடேஷன் கிராப் மரங்கள் வெட்டுவதற்காகவே வளர்க்கப்படுகின்றன. அப்படி வெட்டப்பட்டவைகள் தாமாகவே திரும்பவும் வளரும் தன்மை படைத்தவைகள். அப்படி இல்லாத பகுதிகளில் எல்லாம் மறுபடியும் மரங்கள் வளர்க்கப்படவேண்டும் என்பதினால்தான், சோஷியல் ஃபாரெஸ்ட்ரி என்கிற சமுதாய காடு வளர்ப்பு திட்டம் தற்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9–30)

திரு. பி.எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடுகளில் உள்ள சந்தன மரக்கட்டைகளை வெட்டி பொடி செய்து கடத்துவது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே அப்படி வெட்டிக் கடத்துவதை எல்லாம் கண்டுபிடிப்பதற்காகத் தான் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு அவை எல்லாம் தடுக்கப்பட்டு வருகின்றன.